குற்றவியல் நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி. எண். 02/ 2020

2020 ஆம் ஆண்டு டிசம்பர் 01 ஆம் தேதி செவ்வாய் கிழமை புகார்தாரர் தரப்பு சாட்சியாகிய 1 வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. எம். உமா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு. ஆர். சீனிவாசன் | வயது | : 34 |
| த/பெ | : ராஜூ | தொழில் | : வியாபாரம் |
| ஊர் | : தர்மபுரி மெயின்ரோடு, பிள்ளையார்கோவில்தெரு, | சமயம் | : இந்து |
| வட்டம் | : | ஜாதி | : |
| மாவட்டம் | : சேலம் | | |
| ம.சா | : 1 | தேதி | : 01.12.2020 |

முதல் விசாரணை:

நான் சேலம் மாவட்டம், தீவட்டிபட்டி அஞ்சல், சேலம்- தர்மபுரி மெயின்ரோடு, பிள்ளையார்கோவில்தெரு என்ற முகவரியில் வசிக்கும் ராஜூ மகன் ஆர்.சீனிவாசன் ஆகிய நான் பிரமாணமாய் தெரிவித்துக் கொள்வது என்னவென்றால் நான் மேற்படி வழக்கில் புகார்தாரர் ஆவேன். எனது முதல் விசாரணைக்காக பிரமாணப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையென்று உறுதி கூறுகிறேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு வழக்கு ஆவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

| வ . எண் | தேதி | சான்றாவணங்கள் | ஆவண குறியீடு | ஆவணத் தன்மை |
|---|---|---|---|---|
| 1. | 03.12.2018 | காசோலை எண். 000023 | வா.சா ஆ.1 | அசல் |
| 2. | 06.12.2018 | காசோலை எண். 000023 திருப்பப்பட்டதற்கான காசோலை ரிட்டன் மெமோ | வா.சா.ஆ.2 | சார்வு நகல் |
| 3. | 06.12.2018 | எதிரி எனக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிக்கை | வா.சா.ஆ.3 | சார்வு நகல் |
| 4. | 20.12.2018 | நான் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் சட்ட அறிவிக்கை | வா.சா.ஆ.4 | அலுவலக நகல் |
| 5. | 21.12.2018 | மேற்படி அறிவிப்பினை எதிரி பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை அட்டை | வா.சா.ஆ.5 | அசல் |

மேற்கண்ட ஆவணங்களை ஏற்று எதிரியை மாற்றுமுறை ஆவணங்கள் சட்டப்படி தண்டிக்குமாறும் இழப்பீடு வழங்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

(எதிர்தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/ சுவேதாரண்யன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
ஓமலூர்.